ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2447 - 2025 ජූලි මස 25 වැනි සිකුරාදා - 2025.07.25

2447 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1078 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1084 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2025, ஓகத்து மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, ஓகத்து மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1075 - B 82703- 403 (2025/07)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## அரசாங்க சேவை ஆணைக்குழு

1877/28 ஆம் இலக்க 2014.08.28 ஆந் திகதிய இலங்கை கட்டட நிர்மாண சேவைப்பிரமாணத்தின் 11.2 ஆம் பிரிவின் கீழ் இலங்கை கட்டட நிர்மாண சேவையின் தரம் I இன் பணிப்பாளர் பதவியில் வெற்றிடத்தை நிரப்புதல்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சில் உருவாக்கப்பட்ட இலங்கை கட்டட நிர்மாண சேவையின் தரம் I இன் பணிப்பாளர் பதவிக்கு நியமிப்பதற்காக 1877/28 ஆம் இலக்க 2014, ஓகத்து மாதம் 28 ஆந் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1994/68 மற்றும் 2016 நவெம்பர் மாதம் 24 ஆந் திகதிய அதிவிஷேட வர்த்தமானியில் திருத்தம் செய்யப்பட்ட 2006.01.01 ஆந் திகதியிலிருந்து செல்லுபடியாகும் மற்றும் இலங்கை கட்டட நிர்மாணசேவை பிரமாணத்தின் 11.2 ஆம் பிரிவுக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2085/46 இலக்கம் மற்றும் 2018.08.24 ஆந் திகதிய அதிவிஷேட வர்த்தமானி மூலம் திருத்தம் செய்யப்பட்ட ஏற்பாடுகளுக்கிணங்க குறித்த தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள இலங்கை கட்டட நிர்மாண சேவையில் தற்போது தரம் I இற்கு பதவி உயர்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **வெற்றிடங்களின் எண்ணிக்கை:**

| *தொடர் இலக்கம்* | *திணைக்களம்* | *பதவி* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* |
|---|---|---|---|
| 01 | நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சு | பணிப்பாளர் (இலங்கை கட்டட நிர்மாண சேவையின் தரம் I) | பதவி 01 |

02. **பூர்த்திசெய்யப்பட வேண்டிய தகைமைகள் :**

I. இலங்கை கட்டட நிர்மாண சேவை தரம் I இன் உத்தியோகத்தராக இருத்தல்.

03. **பதவிக்கு தெரிவுசெய்யப்படுகின்ற முறை :**

பொதுச்சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையினால், அவ் ஆணைக்குழுவினூடாக அங்கீகரிக்கப்பட்ட கீழே காட்டப்பட்டுள்ள புள்ளி வழங்கள் நடைமுறைக்கு ஏற்ப புள்ளிகள் வழங்கப்படுகின்ற கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றுக்கு உட்படுத்தப்பட்டு, அவர்கள் சேவை மூப்பு மற்றும் திறமைக்கு பெற்றுக்கொள்ளும் இணைந்த புள்ளிகளின் முன்னுரிமை ஒழுங்குவரிசையின் அடிப்படையில் மேற்கூறப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்றாற்போல் உரிய பதவிக்கு நியமனம் செய்யப்படுவதோடு நியமனம் அமுலுக்கு வரும் திகதி பொதுச்சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

04. **புள்ளி வழங்கும் நடைமுறை :**

| *இலங்கை கட்டட நிர்மாண சேவை தரம் I இன் பதவிக்கு சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையில் நியமனம் செய்தல் – அங்கீகரிக்கப்பட்ட புள்ளி வழங்கள் விதிகள்* | *அதிகபட்ச புள்ளிகள்* | *மொத்த புள்ளிகள்* |
|---|---|---|
| 01. **சேவை அனுபவம்**<br>இலங்கை கட்டட நிர்மாண சேவை தரம் I இன் செயற்றிறன் மிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்துக்காக புள்ளி வழங்கப்படும்.<br>1.1 அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை : 01/2019 இன் படி ஒவ்வொரு திணைக்களத்திலும் இலங்கை கட்டட நிர்மாணசேவையின் உயர் சேவைக்காலத்தைக் கொண்ட உத்தியோகத்தருக்கு அதிக பட்ச புள்ளிகளையும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு அதற்கேற்ற விகிதாசாரத்தின் அடிப்படையிலும் புள்ளிகள் வழங்கப்படும். | 65 | 65 |

| *இலங்கை கட்டட நிர்மாண சேவை தரம் I இன் பதவிக்கு சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையில் நியமனம் செய்தல் – அங்கீகரிக்கப்பட்ட புள்ளி வழங்கள் விதிகள்* | *அதிகபட்ச புள்ளிகள்* | *மொத்த புள்ளிகள்* |
|---|---|---|
| 02. **திறமை**<br>02.1 மேலதிக கல்வித் தகைமைகள்<br>02.1.1 பட்டப்பின் படிப்பு | 05 | 30 |
| 02.2 கட்டடக் கலைஞராக கட்டடக்கலைக் கற்கை மற்றும் தொழிலை எழுச்சி பெறச்செய்ய வழங்கப்பட்ட பங்களிப்பு<br><br>02.2.1 துறைசார்பில் சமர்ப்பிக்கப்பட்ட வெளியீடுகள்<br><br>• ஆய்வுசார் வெளியீடுகள் (Published papers in journals or conferences)<br><br>- ஒரு வெளியீட்டுக்கு 03 புள்ளிகள் வீதம் ( அதிகபட்ச வெளியீடுகள் 02ஆகும் )<br><br>• பத்திரிகைகள்/ இதழ்கள்<br><br>- ஒரு வெளியீட்டுக்கு 02 புள்ளிகள் வீதம் ( அதிகபட்ச வெளியீடுகள் 03ஆகும்<br><br>02.2.2 கட்டடக் கலைக்குரிய உள்நாட்டு வெளிநாட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் வகித்த பதவிக்கு வகிக்ககப்பட்ட ஒரு பதவிக்கு 02 புள்ளிகள் வீதம் (எழுத்து மூலமான உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதோடு அதிக பட்ச பதவிகள் 03 க்கு புள்ளிகள் வழங்கப்படும்<br><br>02.2.3 பாராட்டுக்களுக்காக<br>நிறுவனத் தலைவரினால் பொது 230b படிவத்தினூடாக வழங்கப்பட்டுள்ள பாராட்டுக் கடித மொன்றுக்கு 01 புள்ளி வீதம் (அதிக பட்ச பாராட்டுக் கடிதங்கள் 03 க்காக) | <br><br><br><br><br>06<br><br><br><br><br><br><br><br><br>06<br><br><br><br><br><br>03 | |
| 02.3 தெரிவு செய்யப்படும் பதவியின் கருமங்களுக்காக பங்களிப்பு செய்யும் விதம் தொடர்பில் கணினி மூலம் செய்யப்படும் 10 நிமிட முன்வைப்பு (Power Point Presentation)<br><br>i. தொடர்பு (Relevancy) - 02 புள்ளிகள்<br>ii. ஆக்கத்திறன் / (Creativity ) - 02 புள்ளிகள்<br>iii. அதற்காக அறிமுகப்படுத்தும் புத்தாக்க மற்றும் பரிந் துரைகள் - 02 புள்ளிகள் (Innovations & Suggestions)<br>iv. நேர முகாமைத்துவம் (Time Management) - 02 புள்ளிகள்<br>v. ஆங்கில மொழிப் புலமை (Proficiency in English) - 02 புள்ளிகள்<br><br>குறிப்பு :<br>(அ) மேற்படி (V) அளவுகோளின் கீழ் புள்ளிகளை பெற முடிவது விண்ணப்பதாரி ஆங்கில மொழியில் இச் சமர்ப்பித்தலை செய்யும் போது மாத்திரம் ஆகும்.<br><br>(ஆ) முன்வைப்பதற்குரிய வன் பிரதியை (Hard copy) நேர்முகப் பரீட்சை குழுவிற்கு அச்சந்தர்ப்பத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். மேலதிகமாக ஆங்கில மொழி மூலம் சமர்ப்பிக்கும் முன்வைத்தலில் வன்பிரதியையும் இச் சந்தர்ப்பத்தில் சமர்ப்பிப்பது கட்டாயமாகும். | 10 | |

| *இலங்கை கட்டட நிர்மாண சேவை தரம் I இன் பதவிக்கு சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையில் நியமனம் செய்தல் – அங்கீகரிக்கப்பட்ட புள்ளி வழங்கள் விதிகள்* | *அதிகபட்ச புள்ளிகள்* | *மொத்த புள்ளிகள்* |
|---|---|---|
| 03. நேர்காணலில் வெளிக்காட்டும் திறமை<br>a) தலைமைத்துவம் - 02 புள்ளிகள்<br>தொடர்பாடல் திறன் - 02 புள்ளிகள்<br>b) ஆளுமை - 01 புள்ளிகள் | | 05 |
| மொத்த புள்ளிகள் | | 100 |
| **கவனிக்க –**<br>I. 2.1.1 மற்றும் 2.2.1 இன் கீழ் புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள சமர்ப்பிக்கப்படுகின்ற அனைத்து வெளியீடுகளுக்கும் எழுத்து மூல உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் | | |

05. பொதுச் சேவையின் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கு இலங்கை கட்டிட நிர்மாண சேவைப்பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு (இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1877/28 ஆம் இலக்க 2014, ஓகத்து மாதம் 28 ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள) அப்பிரமாணத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களின் கீழ் தெரிவுசெய்யப்படும் உத்தியோதகத்தர்கள் இலங்கை கட்டட நிர்மாண சேவையின் தரம் I இன் வெற்றிடங்கள் நிலவும் மேற்படி பதவிகளுக்கு உரிய பதவிகளினது கடமையை பொறுப்பேற்கும் நாளிலிருந்து செயற்படும்படி உரிய பதவிகளுக்கு நியமித்தல் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் செய்யப்படும்.

06. இவ் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள குறைந்தபட்ச தகைமைகளை பூர்த்தி செய்யும் தற்போது செயற்திறனோடு சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள்.

07. கீழ்வரும் மாதிரிக்கேற்ப பூரணப்படுத்தப்படும் விண்ணப்பப்படிவம் திணைக்களத் தலைவரின் பரிந்துரையுடன் பதிவுத் தபாலில் 2025.08.22 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறும் வகையில் 'செயலாளர், பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, சுதந்திர சதுக்கம், கொழும்பு -07' என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பம் இடப்படும் கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் 'இலங்கை கட்டட நிர்மாண சேவையின் தரம் I இன் பதவிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புதல்' என்றவாறு தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். அத்தினத்துக்கு பின்னர் கிடைக்கப்பெறும் எந்த விண்ணப்பப்படிவமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதோடு விண்ணப்பப்படிவம் தொலைதல் அல்லது காலதாமதமாதல் தொடர்பிலான முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

08. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலில் மொழி வாசகங்களிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மை அல்லது முரண்பாடு இருப்பதாகக் கண்டால் அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்களமொழி மூல அறிவித்தல் செல்லுபடியாகும்.

09. விண்ணப்பப்படிவத்தை www.pubad.gov.lk ஊடாக தரவிறக்கம் செய்ய முடியும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப் பிரகாரம்,

எஸ். ஆலோக பண்டார,
செயலாளர்,
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2025, யூலை 22.

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

**இலங்கை கட்டட நிர்மாண சேவையின் தரம் I இன் உத்தியோகத்தர்களது சேவை மூப்பு மற்றும் திறமையின் அடிப்படையில் நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சின் இலங்கை கட்டட நிர்மாண சேவையின் தரம் I இன் பணிப்பாளர் பதவியின் வெற்றிடத்தை நிரப்புவதற்கான விண்ணப்பப்படிவம்**

01. உத்தியோகத்தர் தொடர்பான விபரங்கள் :

i. முழுப்பெயர் (சிங்களத்தில்) : ……………………………………………………………………………………

ii. முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்): ……………………………………………………………………………

(உதா: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

iii. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) (*உதா*: GUNAWARDHANA, H. M. S. K.): ……………
………………………………………………………………………………

iv. பால் : பெண் ☐ ஆண் ☐

v. பிறந்த திகதி : ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

vi. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

vii. நிரந்தர முகவரி: ……………………………………………………………………………………
……………………………………………………………………………………
……………………………………………………………………………………

viii. நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்):
……………………………………………………………………………………
……………………………………………………………………………………
……………………………………………………………………………………

ix. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் வயது :

வருடங்கள் :…………………. மாதங்கள் : ……………. நாட்கள் :……………..

x. தொலைபேசி இலக்கம்: ☐☐☐☐☐☐☐☐☐☐

கைத்தொலைபேசி: ☐☐☐☐☐☐☐☐☐☐

அலுவலகம் :

மின்னஞ்சல் முகவரி :……………………………………………………

02. பதவி தொடர்பான தகவல்கள் :

i. இலங்கை கட்டட நிர்மாண சேவையின் தரம் I இற்கு நியமனம் பெற்ற திகதி : ………………………………………

ii. இலங்கை கட்டட நிர்மாண சேவையின் தரம் I இற்கு நியமனம் பெற்ற திகதியிலிருந்து விண்ணப்பப்படிவம் கோரப்படும் இறுதித் திகதி வரையிலான சேவைக்காலம் :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

iii. நிகழ்கால சேவை நிலையம் மற்றும் முகவரி :.......................................................................................................

iv. தற்போது வகிக்கும் பதவி :.......................................................................................................

v. அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :.......................................................................................................

vi. கல்வி மற்றும் தொழில் தகைமைகள்:.......................................................................................................

| *தொடர் இல.* | *கல்வித் தகைமைகள்* | *தகைமைகளை பூரணப்படுத்திய ஆண்டு* | *நிறுவனம்* |
|---|---|---|---|
| | | | |
| | | | |

vii. துறைசார் தகைமைகள்:
குறித்த துறை தொடர்பில் வெளிக்காட்டியுள்ள விஷேட பங்களிப்புக்கள் -

| ❖ *ஆய்வுகள் மற்றும் வெளியீடுகள்* | *விபரங்கள்* | *ஆண்டு* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

❖ ஆய்வுச் சுருக்கம் நேர்காணலின்போது முன்வைக்கப்பட வேண்டும்.

03. (i) இலங்கை கட்டட நிர்மாண சேவையின் தரம் I இற்கு நியமிக்கப்பட்ட திகதியில் இருந்து ஊதியமற்ற விடுமுறை அல்லது பகுதி ஊதியம் கொண்ட விடுமுறை பெற்றுள்ளீரா?

| *தொடர் இல.* | *காரணம்* | *ஊதியமற்ற / பகுதி ஊதியம் கொண்ட விடுமுறை* | *காலம்* | |
|---|---|---|---|---|
| | | | *திகதியில் இருந்து* | *திகதி வரை* |
| | | | | |
| | | | | |

(ii) விண்ணப்பம் கோரப்பட்ட கடைசித் திகதிக்கு முந்தைய 05 ஆண்டுகளில் அனைத்து சம்பள ஏற்றங்களையும் ஈட்டியுள்ளீரா?

ஆம் ☐ இல்லை ☐

04. (i) கடந்த 5 ஆண்டுகளில் நீங்கள் ஒழுக்காற்றுத் தண்டனையொன்றுக்கு உட்பட்டுள்ளீரா? ..............................................................

(ii) முடிவுறாத ஒழுக்காற்று விவகாரங்கள் நிலுவையில் இருக்கின்றனவா? ....................................................................................

05. விண்ணப்பதாரரின் பிரகடனம் ;

மேற்கூறிய தகவல்கள் யாவும் என் அறிவுக்குட்பட்ட வகையில் உண்மையானவை மற்றும் சரியானவை என்று இதன்மூலம் சான்று பகர்கிறேன்.

……………………… ………………………………………..
திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்.

06. திணைக்களத் தலைவரின் பரிந்துரை மற்றும் சான்றுப்படுத்தல்

பொருத்தமற்ற பகுதிகளை வெட்டி விடவும்.

I. இந்த விண்ணப்பதாரர் தொடர்பில் எந்தவொரு ஒழுங்காற்று நடவடிக்கையும் எடுக்கப்பட்டு அல்லது எடுக்கப்பட உத்தேசிக்கப்பட்டோ இல்லை என்பது (எடுக்கப்பட்டிருப்பின் குற்றம் புரிந்த திகதி, தண்டனை முதலிய ஒழுங்காற்று நடவடிக்கைகள் தொடர்பான விவரங்களைத் தரவும்.)

II. இந்த விண்ணப்பதாரர் தரம்-I க்கு பதவி உயர்வு பெற்ற பின்னர் ஊதியம் அற்ற அல்லது பகுதி ஊதியம் கொண்ட விடுமுறை பெற்றுள்ளார்/பெறவில்லை. (பெற்றிருந்தால் கீழ்வரும் அட்டவணையில் காலப்பகுதியைக் குறிக்கவும்)

| *காலப்பகுதி* | | *பகுதி ஊதியம்/ ஊதியம் அற்ற விடுமுறை* | *காரணம்* |
|---|---|---|---|
| *முதல்* | *வரை* | | |
| | | | |

III. பதவியுயர்வுத் திகதிக்கு முந்தைய ஐந்து வருடங்களுக்குள் (05) அனைத்து சம்பள ஏற்றங்களையும் பெற்று திருப்திகரமான சேவைக்காலத்தை பூரணப்படுத்தியுள்ளார் /பூரணப்படுத்தவில்லை.

IV. அதன்படி அவன்/அவள் இந்நேர்காணலில் கலந்துகொள்ளத் தேவையான அடிப்படைத் தகைமைகளை பூரணப்படுத்தியுள்ளார் / பூரணப்படுத்தவில்லை என்பதால் விண்ணப்பப்படிவத்தை பரிந்துரைக்கிறேன்/ பரிந்துரைக்கவில்லை.

திகதி ..................................................... ........................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்,
உத்தியோகபூர்வ முத்திரை.

07-836

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை அஞ்சல் திணைக்களத்தின் கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாத/ தொழில்நுட்ப பதவித் தொகுதியின் III ஆந் தரத்தின் அஞ்சல் சேவை அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025

இலங்கை அஞ்சல் திணைக்களம் கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் – தொழில்நுட்பம் அல்லாத / தொழில்நுட்ப பதவித் தொகுதியின் III ஆந் தர அஞ்சல் சேவை அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2025 ஆம் வருடத்தில் ஒற்றோபர் மாதம் நடாத்தப்படும் என்பதை இத்தால் அறியத்தருகிறேன்.

இலங்கை அஞ்சல் திணைக்களத்தினால் கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் – தொழில்நுட்பம் அல்லாத/ தொழில்நுட்ப பதவித் தொகுதியின் III ஆந் தர அஞ்சல் சேவை அலுவலர் பதவியில் நிலவும் 600 வெற்றிடங்களுக்காக தகுதியுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து மாவட்ட ரீதியில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk இணையத்தளத்தில் "Our services" இன் கீழ் காணப்படுகின்ற "Online Applications – Recruitment Exams/E.B. Exams" ஊடாக வெளியிடப்பட்டுள்ளது என்பதுடன் விண்ணப்பங்களை நிகழ்நிலை (Online) ஊடாக மாத்திரமே விண்ணப்பிக்க முடியும். நிகழ்நிலை விண்ணப்பங்களானது 2025, யூலை மாதம் 28 ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு ஆரம்பிக்கப்படும் என்பதுடன் 2025, ஓகத்து மாதம் 15 ஆம் திகதி இரவு 9.00 மணிக்கு முடிவுறுத்தப்படும்.

தற்போது அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் விண்ணப்பங்களின் பிரதியொன்றை தமது சுயவிபரக் கோவையில் உள்ளிடுவதற்காக நிறுவனத் தலைவருக்கு கையளிக்க வேண்டும் என்பதுடன், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் நிறுவனத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் பிரதி மற்றும் சேவையை உறுதிப்படுத்தும் கடிதம் ஆகியவற்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

2. **மொழி மூலம் :** பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் மொழிமூலம் பின்னர் மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

3. **ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைகள்** :

(அ) **கல்விசார் தகைமைகள்** :

சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் மேலும் இரண்டு பாடங்களுக்கு திறமைச் சித்தியுமாக ஒரே அமர்வில் 6 பாடங்களில் க.பொ.த.(சா/த) சித்தி அடைந்திருத்தல்.

மற்றும்

க.பொ.த (உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களில் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர்ந்த) ஒரே அமர்வில் சித்தி அடைந்திருத்தல்.

(ஆ) **தொழில்சார் தகைமைகள் :**

கணினிப் பாவனை சம்பந்தமான மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவின் பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தில் 360 மணித்தியாலங்களுக்கு குறையாத பாடநெறியைப் பூர்த்தி செய்துள்ளதாக சான்றிதழ் பெற்றிருத்தல்.

***குறிப்பு*** : நீங்கள் பயின்ற பாடநெறி மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமொன்றா மற்றும் பாடநெறியொன்றா என்பதை www.tvec.gov.lk எனும் வெப் இணையத்தளத்தின் மூலம் உறுதிசெய்து கொள்ள முடியும்.

(இ) **உடல்சார் தகுதி** :

சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியில் கடமையாற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் மனோ திடகாத்திரத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

(ஈ) **வேறு தகைமைகள்** :

i. விண்ணப்பதாரர் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
ii. விண்ணப்பதாரர் நன்னடத்தை உடையவரென கிராம அலுவலரினால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.
iii. ஆண்/பெண் இரு பாலாரும் விண்ணப்பிக்க முடியும்.
iv. 15.08.2025 ஆம் திகதியன்று மேற்படி 3 (அ) மற்றும் (ஆ) என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தகைமைகளையும் சகல வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(உ) இப் பரீட்சைக்காக சிறப்பு தேவைகள் உள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் அது தொடர்பில் கட்டாயமாக விண்ணப்பத்தில் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் உரிய மருத்துவ சான்றிதழின் பிரதியை விண்ணப்பத்தின் அச்சிடப்பட்ட பிரதியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஊ) மாவட்ட ரீதியில் நிலவுகின்ற 600 பதவி வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்தல் பின்வருமாறு இடம்பெறும்.

| *மாவட்டம்* | *வெற்றிட எண்ணிக்கை* |
|---|---|
| கொழும்பு | 204 |
| கம்பஹா | 42 |
| களுத்துறை | 27 |
| கண்டி | 60 |
| மாத்தளை | 11 |
| நுவரெலியா | 15 |
| காலி | 21 |
| அம்பாந்தோட்டை | 10 |
| மாத்தறை | 11 |
| யாழ்ப்பாணம் | 08 |
| கிளிநொச்சி | 01 |
| மன்னார் | 03 |
| முல்லைத்தீவு | 01 |
| வவுனியா | 02 |
| அம்பாறை | 11 |
| மட்டக்களப்பு | 12 |
| திருகோணமலை | 05 |
| குருநாகல் | 30 |
| புத்தளம் | 18 |
| அநுராதபுரம் | 17 |
| பொலநறுவை | 09 |
| பதுளை | 28 |
| மொனராகலை | 11 |
| கேகாலை | 18 |
| இரத்தினபுரி | 25 |
| மொத்தம் | 600 |

(எ) மாவட்டத்திற்கு உரித்தானவர் என்பதற்கு காணப்படவேண்டிய தகைமைகள் -

மாவட்டமொன்றின் வெற்றிடங்களுக்காக போட்டியிடுவதாயின் பின்வரும் விடயங்களுள் ஒன்றையேனும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(i) விண்ணப்பதாரர் குறிப்பிட்ட மாவட்டத்தில் பிறந்திருத்தல் அல்லது பரீட்சைக்கான தகைமைகளை பூர்த்தி செய்ய வேண்டிய இறுதித் தினத்திற்கு முந்தைய 5 (ஐந்து) ஆண்டுகளினுள் குறிப்பிட்ட மாவட்டத்தில் குறைந்த பட்சம் 03 ஆண்டுகளேனும் தொடர்ச்சியான நிரந்தர வதிவிடத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும். அல்லது

(ii) அவர் தொடர்ச்சியாக 5 ஆண்டுகள் தமது இடைநிலை பாடசாலைக் கல்வியை குறிப்பிட்ட மாவட்டத்தில் பெற்றிருத்தல் வேண்டும்.

*குறிப்பு* -

(i) எவரேனும் விண்ணப்பதாரரின் தந்தை அல்லது தாய் அரசாங்க, மாகாண அரசாங்க சேவையின் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனங்களில் இடமாற்றம் பெறும் சேவையில் சேவையாற்றுவாராயின் அவ் விண்ணப்பதாரருக்கு, தனது தந்தையின் அல்லது தாயின் அல்லது பிறந்த மாவட்டத்தை தனக்குரிய மாவட்டமாக தெரிவு செய்வதற்கு இடமளிக்கப்படும்.

(ii) எந்தவொரு விண்ணப்பதாரருக்கும் ஒரு மாவட்டத்திற்கு மேலதிகமான எண்ணிக்கையான வெற்றிடங்களுக்கு போட்டியிடுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. போட்டியிடுவதற்கான மாவட்டம் தெரிவு செய்த பின்னர் மீண்டும் அதனை மாற்றுவதற்கு அனுமதி அளிக்கப்படமாட்டது.

4. **பரீட்சை நிலையம் :**

- கீழே குறிப்படப்பட்டுள்ள நகரங்களில் அமைந்துள்ள பரீட்சை நிலையங்களில் மாத்திரம் பரீட்சை இடம்பெறும். பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் நகரம் மற்றும் நகர இலக்கத்தை இங்கு குறிப்பிட்டவாறு சரியாக விண்ணபத்தில் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பிக்கப்பட்ட நகரத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.
- விண்ணபத்தில் தனது விருப்பத்திற்கமைய இரு நகரங்களை குறிப்பிடலாம் என்பதுடன் பரீட்சை நிலையமொன்றை தாபிப்பதற்கு போதுமான எண்ணிக்கையான விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்கவில்லை எனில் அவ் விண்ணப்பதாரர்கள் அண்மித்த வேறொரு நகரத்தில் அமைக்கப்படுகின்ற பரீட்சை நிலையத்திற்கு மாற்றப்படுவார்கள்.
- அத்துடன் உத்தேசிக்கப்பட்டுள்ள நகரங்கள் அனைத்திலுமோ அல்லது அதிக எண்ணிக்கையான அல்லது பரீட்சை நிலையமொன்றை தாபிப்பதற்கு போதுமான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறவில்லை எனில் பரீட்சையை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்கு பரீட்சைகள் திணைக்களத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பரீட்சை நிலையம்

| *மாவட்டம் /நகரம்* | *மாவட்ட/நகர இலக்கம்* |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| அம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| வவுனியா | 12 |
| முல்லைத்தீவு | 13 |
| கிளிநொச்சி | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருநாகல் | 18 |
| புத்தளம் | 19 |

| *மாவட்டம் /நகரம்* | *மாவட்ட/நகர இலக்கம்* |
|---|---|
| அநுராதபுரம் | 20 |
| பொலநறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொணராகலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

**5. ஆட்சேர்ப்பு முறை :**

(i) மாவட்ட மட்டத்தில் விண்ணப்பங்கள் கோரப்பட்டு எழுத்துப் பரீட்சையில் இரண்டு வினாத்தாள்களிலும் சித்தியடையும் விண்ணப்பதாரிகள், அப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் தொகையில் மாவட்ட மட்டத்தில் திறமை ஒழுங்கு வரிசை அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் நிலவுகின்ற வெற்றிடங்கள் நிரப்பப்படும். (சேவையின் அவசியத்தன்மை அடிப்படையில் தீவின் எந்தவொரு பிரதேசத்திற்கும் இடமாற்றம் மேற்கொள்வதற்கான நிபந்தனையின் கீழ்)

(ii) ஒரு மாவட்டத்தில் நிலவும் சகல வெற்றிடங்களையும் நிரப்ப முடியாத சந்தர்ப்பத்தில் அவ் வெற்றிட எண்ணிக்கையானது குறிப்பிட்ட மாவட்டத்திற்கான மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களுக்குரிய விண்ணப்பதாரர்கள் பெற்றுக்கொண்ட மொத்த புள்ளிகளின் திறமை ஒழுங்கு வரிசை அடிப்படையின் மூலம் நிரப்பப்படும்.

(iii) மேற்படி i மற்றும் ii இற்கமைய நிரப்ப முடியாத வெற்றிட எண்ணிக்கை காணப்படுமாயின் அவ் வெற்றிட எண்ணிக்கை சகல விண்ணப்பதாரர்களின் திறமை ஒழுங்கு வரிசைப்படி மாவட்ட ரீதியை கருத்திற் கொள்ளாது நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- ❖ மாவட்ட ரீதியில் ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்ற உத்தியோகத்தர் ஒருவர் தகைமையை பெற்றுக் கொள்ளும் மாவட்டத்தில் குறைந்தது 10 வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்யும் வரை மாவட்டத்திற்கு வெளியே இடமாற்றத்தை பெறுவதற்கு தகுதி அற்றவர் ஆவார்.
- ❖ எனினும் சேவையின் அவசியத் தன்மையின் கீழ் மற்றும் விசேடமான சந்தர்ப்பங்களில் நியமன அதிகாரிக்கு மேற்கூறப்பட்ட நிபந்தனைகளை பொருட்படுத்தாது மாவட்டத்திற்கு வெளியே இட மாற்றத்தை மேற்கொள்ள இயலும்.

**6. வயது :**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் மற்றும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அதன்படி 15.08.2007 திகதியில் அல்லது அதற்கு முன்னரோ மற்றும் 15.08.1995 திகதியில் அல்லது அதற்குப் பின்னரோ பிறந்த திகதியாக கொண்டவர்கள் மாத்திரம் இதற்காக விண்ணப்பிக்க முடியும்)

**7. சம்பள அளவுத்திட்டம் :**

அரசாங்க நிர்வாக சுற்றிக்கை இலக்கம் 10/2025 இற்கு அமைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் (PSO 2 - 2025) ரூ. 54,650.00 - 10 X 800 - 10 X 1,190 ஆகும். (உச்ச வரையறை அற்றது)

**8. விண்ணப்பிக்கும் முறை :**

(அ) நிகழ்நிலை (online) பரீட்சை விண்ணப்பம் ஆங்கில மொழியில் மாத்திரம் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.விண்ணப்பதாரியினால் நிகழ்நிலை மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற மென்பொருள் பிரதி செல்லுபடியாகும் விண்ணப்பமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது/ஏற்றுகொள்ளப்படவில்லை என குறித்த இணைய கட்டமைமைப்பினுள் பிரவேசிக்க பயன்படுத்திய செல்லிட தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ் செய்தியின் (SMS) மூலமோ அல்லது மின்னஞ்சல் (E – mail ) முகவரிக்கோ அறியத்தரப்படும். நிகழ்நிலை விண்ணப்பங்களை பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சைக்காக விண்ணப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் படிவத்தை (Instructions) பதிவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பங்களை பூர்த்தி செய்யும்

பொழுது அவ் அறிவுறுத்தல்களை கவனமாக பின்பற்றவும். சரியாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

(ஆ) விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி வரை தாமதமாவதனால் ஏற்படும் எந்தவொரு பாதகமான நிலைக்கும் விண்ணப்பதாரரே பொறுப்பேற்றல் வேண்டும்.

(இ) பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தான் தோற்றும் சகல பாடங்களுக்கும் மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையத் தக்கவாறு தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் :

I. தேசிய ஆளடையாள அட்டை ;
II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு ;
III. செல்லுபடியாகும் இலங்கைச் சாரதி அனுமதிப்பத்திரம்.

அதே போன்று பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை சரிபார்க்கும் வகையில் முகத்தையும் மற்றும் மின்னியல் தொடர்பு சாதனங்களை அணியவில்லை என்பதை உறுதிப்படுத்தும் வகையில் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தனது ஆளடையாளத்தை சரிபார்ப்பதை மறுக்கும் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் உள்நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்கும் தருணம் முதல் பரீட்சை முடிவடைந்து அங்கிருந்து வெளியேறும் வரை முகம் மற்றும் இரு காதுகளை மூடாது இருத்தல் வேண்டும்.

**9. பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் :**

பரீட்சைக் கட்டணம் ரூ. 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தை செலுத்தும் பொழுது நிகழ்நிலை முறைமையினால் வழங்கப்படும் பின்வரும் கட்டண செலுத்துகை செயற்பாட்டின் கீழ் மாத்திரம் கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

(i) எந்தவொரு வங்கி கடனட்டைகள் மூலம் (Any Bank Credit Card);
(ii) இணைய மூலமான கொடுப்பனவு வசதிகளைக் கொண்ட எந்தவொரு வங்கி வரவு அட்டைகள் மூலம் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions) ;
(iii) இலங்கை வங்கியின் ஆன்லைன் வங்கி முறைமை (Online Banking Method of Bank Of Ceylon);
(iv) இலங்கை வங்கியின் ஏதேனும் வங்கிக் கிளையின் மூலம் (Any Branch of the Bank Of Ceylon)

குறிப்பு :

(அ) மேற்கூறிய செயற்பாட்டின் மூலம் மேற்கொள்ளப்படும் கொடுப்பனவு தொடர்பான அறிவுறுத்தல்கள் இணையத் தளத்தில் பரீட்சைக்கான தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) பணம் கிடைத்தமை தொடர்பில் குறுஞ்செய்தி (SMS) ஒன்றின் மூலம் அல்லது மின்னஞ்சல் செய்தி மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக்கான கட்டணத்தின் முழுத்தொகையும் செலுத்தப்படல் வேண்டுமென்பதோடு, பரீட்சைக் கட்டணம் குறைவாக அல்லது கூடுதலாக செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும் .மேலே குறிப்பிட்டுள்ள கொடுப்பனவு முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்தும்போது ஏற்படுகின்ற வழு தொடர்பாக இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் பொறுப்பேற்க மாட்டாது.

(இ) பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட கட்டணம் எந்தவொரு காரணத்திற்காகவும் மீளச் செலுத்தப்படவோ அல்லது வேறு எந்தவொரு பரீட்சைக்காக மாற்றம் செய்யப்படவோ மாட்டாது.

**10.** வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில், விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வயது வரையறைக்குட்பட்ட, விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அவர்களினால் நிகழ்நிலை (Online) மூலம் மாத்திரம் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் வழங்கப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் வெளியிடப்பட்டவுடன், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் அது தொடர்பாக குறிப்பிட்ட அறிவித்தலொன்றின் மூலம் விண்ணப்பதாரர்களுக்குக் குறுஞ்செய்தி மூலம் அறிவிக்கப்படும். பரீட்சார்த்தி ஒருவருக்கு தனது அனுமதி அட்டை கிடைக்கப்பெறவில்லை எனில், அவர் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் தாபன பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையிடம் அது பற்றி விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது, விண்ணப்பதாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை சரியாகக் குறிப்பிட்ட விண்ணப்பக் கடிதமொன்றினால் அறிவித்தலில் குறிப்பிட்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி விசாரித்தல் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு விசாரிக்கும் போது

பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படுகின்ற ஏதேனுமொரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியொன்றையும் பரீட்சைக் கட்டணத்தை செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்.

விண்ணப்பதாரருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படுவதை அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதி உடையவர் என்பதற்கான ஏற்புடைமையாக கருதுதல் கூடாது. அனுமதிப் பத்திரங்களை பரீட்சித்து திருத்தங்கள் ஏதேனும் காணப்படுமிடத்து தாமதமின்றி பரீட்சைகள் திணைக்களத்தை அழைத்து விண்ணப்பத்திற்கமைய உரிய திருத்தத்தினை மேற்கொள்ளுதல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் அல்லது நேர்முகப்பரீட்சையின் போது திருத்தத்தை மேற்கொள்ளுமாறு வேண்டப்படுமிடத்து அது கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

**11. சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவதற்கான நியதிகளும் நிபந்தனைகளும் :**

(அ) இப் பதவி நிரந்தரமானது, ஓய்வூதிய உரித்துடையதாகும். எனினும் பதவிக்கான ஓய்வூதிய முறைமை தொடர்பில் அரசினால் எதிர்வரும் காலத்தில் எடுக்கப்படும் கொள்கைகளுடனான தீர்மானங்களுக்கு உத்தியோகத்தர் கீழ்படிதல் வேண்டும்.

(ஆ) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் அச் சந்தர்ப்பத்தில் அரசாங்க சேவையில் வேறொரு பதவியில் நிரந்தரப்படுத்தப்படவில்லை எனில் அவர்கள் மூன்று ஆண்டுகள் தகுதி காண் கால அடிப்படையில் உரிய பதவிக்கு நியமனம் செய்யப்படுவார். அரசாங்க சேவையில் நிரந்தர மற்றும் ஓய்வூதிய உரித்துடைய உத்தியோகத்தர் எனில் அவரது நியமனம் ஒரு வருட பதில் கடமை கால அடிப்படையிலானது.

**12. பரீட்சை முறை :**

இப்பரீட்சை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு இரு வினாத்தாள்களைக் கொண்ட எழுத்துப் பரீட்சையாகும்.

| | *வினாப்பத்திரம்* | *காலம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்தியடைவதற்கான புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 01 | மொழித் திறமை | 01½ மணித்தியாலம் | 100 | 40% |
| 02 | நுண்ணறிவுப் பரீட்சை | 01 மணித்தியாலம் | 100 | 40% |

| | *வினாத்தாளின் பெயர்* | *பாடத் திட்டம்* |
|---|---|---|
| 01 | மொழித்திறன் | இவ் வினாத்தாள் கட்டுரை மற்றும் சாராம்சம் எழுதுதல் என்பவற்றைக் கொண்டது. பரீட்சார்த்தியின் அபிப்பிராயத்தை வெளிப்படுத்தல், தொகுத்தல் மற்றும் சமர்ப்பித்தல், மொழி பற்றிய அறிவு, எழுத்துக்களின் ஒழுங்கமைப்பு மற்றும் சரளமாக உபயோகிக்கும் திறன் என்பவை இதன் மூலம் அளவிடப்படுகிறது.<br>ஒத்த கருத்து, எதிர்க் கருத்து பற்றிய அறிவு மொழியை உபயோகிக்கும் பொழுது பின்பற்ற வேண்டிய யுக்திகள் தொடர்பான அறிவு இதன் மூலம் பரீட்சிக்கப்படுகிறது.<br>மொழி தொடர்பாக பரீட்சார்த்திகளின் புரிதலை சோதிக்கும் பொருட்டு தரப்பட்டுள்ள பந்தி தொடர்பில் உரையின் பொருள், தனி ஒரு வாக்கியமாக வெளிப்படுத்தல், அது தொடர்பில் விமர்சன ரீதியான குறிப்புக்களை எழுதிக் காட்டுதல், மாற்றுக்கருத்துக்கள் கொண்ட தொகுப்பில் இருந்து மிகவும் பொருத்தமான கருத்தை தெரிவு செய்தல், பல்வேறுபட்ட விடைகளுக்கிடையில் சரியான விடையைத் தெரிவு செய்தல்.<br>சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். |
| 02 | நுண்ணறிவுப் பரீட்சை | பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியான வெளிப்படுத்தல்கள் மற்றும் பகுப்பாய்வு செய்யும் திறன் அத்துடன் சரியான சம்பவம் தொடர்பான அனுமானங்களை அணுகும் ஆற்றல், பொது அறிவு மற்றும் அறிவாற்றல் தொடர்பான அளவிடுதலை நோக்காகக் கொண்டு தொகுக்கப்பட்டுள்ளது. எண் திறன்கள், கணித பிணக்குகள், பொது அறிவு, சூழல் மற்றும் தொடர்பான பல்வேறு வினாக்களைக் கொண்ட வினாத்தாள் ஆகும். |

சித்தி பெறுவதற்காக ஒவ்வொரு வினாத்தாளுக்கும் 40% அல்லது அதற்கு அதிகமான புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

13. **தேர்ந்தெடுக்கப்படும் முறை :**

(அ) இப் பதவிக்காக மேற்படி 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பரீட்சிப்பதற்கான நேர்முகப்பரீட்சையின் பின்னர் தகுதியானவர் தெரிவு செய்யப்படுவார். (நேர்முகப்பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டது என்பதுடன் தகைமைகள் பரீட்சிக்கப்படுதல் மாத்திரமே மேற்கொள்ளப்படும்.)

(ஆ) பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் மாவட்ட ரீதியாக திறமை அடிப்படையில் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர் என்பதுடன், விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற இறுதித் திகதியில், அறிவித்தலின் படி தகைமைகளை பெற்றுக்கொள்ளாத விண்ணப்பதாரர்கள் நியமனத்தைப் பெறுவதற்கு தகைமை அற்றவர்களாவர்.

(இ) எழுத்துப் பரீட்சையின் போது பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையிலும், மற்றும் நேர்முகப்பரீட்சைக் குழுவினரின் பரிந்துரைக்கமையவும் தயாரிக்கப்படும் முன்னுரிமை பட்டியலில் மாவட்ட ரீதியான திறமை அடிப்படையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரர் தொடங்கி ஒழுங்கு வரிசைப்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் நிரப்பப்பட வேண்டிய வெற்றிட எண்ணிக்கைக்கான நியமனங்களை வழங்குவதற்காக விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படுவர்.

(ஈ) எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திலும் 40% க்கு குறையாத புள்ளிகளை பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரர்களின் மொத்தப் புள்ளிகள் மாவட்ட ரீதியிலான திறமை அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பெறுபேற்று ஆவணம் பரீட்சைத் திணைக்களத்தினால் அஞ்சல் அதிபதிக்கு வழங்கப்படும். அதற்கு மேலதிகமாக பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரர்களுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட ரீதியில் அனுப்பப்படலாம் அல்லது இலங்கை அஞ்சல் திணைக்களத்தின் www.results.exams.gov.lk இணையத்தளத்தின் மூலம் பெறுபேறுகள் வெளியிடப்படலாம்.

14. பரீட்சையை நடாத்துதல் அல்லது பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பிலான பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். குறித்த சட்ட திட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

15. **பொய்யான தகவல்களை வழங்குதல் :**

இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளை எந்தவொரு விண்ணப்பதாரியும் கொண்டிருக்கவில்லை என்பது தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைபெறும் வேளையிலோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்த நிலை இரத்துச் செய்யப்படலாம். சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட பின்னர் விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் தகவல் பொய்யானது என தெரியவரும் பட்சத்தில் அவர் சேவையில் இருந்து நீக்கப்படலாம்.

இவ் அறிவித்தலில் குறிப்பிடப்படாத வேறு ஏதேனும் விடயம் தொடர்பிலான இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை அஞ்சல் அதிபதிக்கு உரியதாகும்.

16. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ் அறிவித்தலில் மொழிகளின் விளக்கங்களுக்கிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மை அல்லது தொடர்பின்மை காணப்படுவது தெரியவரும் சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியிலான அறிவித்தலின் பிரகாரமே நடவடிக்கை எடுக்கப்படும்.

சமீஷா டி சில்வா,
பிரதி அஞ்சல் அதிபதி (நிர்வாகம்).

எஸ். ஆர். டபிள்யூ. எம். ஆர். பி. சத்குமார,
அஞ்சல் அதிபதி.

07-811

## பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பச் சேவையின் வகுப்பு I தரம் III, வகுப்பு I தரம் II மற்றும் வகுப்பு I தரம் I இன் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2019(II)2025

1.0 இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பச் சேவையின் வகுப்பு I தரம் III, வகுப்பு I தரம் II, மற்றும் வகுப்பு 1 தரம் I இன் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2019(II)2025 பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கண்காணிப்பின் கீழ் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் 2025.09.13 மற்றும் 2025.09.14 ஆகிய நாட்களில் கொழும்பில் நடாத்தப்படும் என்பதனை இத்தால் அறியத்தரப்படுகின்றது.

2.0 இப்பரீட்சை 1894/26 மற்றும் 2014.12.26 ஆந் திகதிய அதி விஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கைத் தகவல் தொடர்பாடல் மற்றும் தொழிநுட்பச் சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப நடாத்தப்படும்.

3.0 மேற்குறிப்பிட்ட சேவைகளுக்கு உரித்துடையதாக நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சை கீழ்வருமாறு அமையப்பெற்றுள்ளது.

| *தொடரிலக்கம்* | *பரீட்சையின் பெயர்* | *குறியீட்டுப் பெயர்* |
|---|---|---|
| 01 | இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பச் சேவையின் வகுப்பு 1 தரம் III இன் அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை | SLICT 1(III) |
| 02 | இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பச் சேவையின் வகுப்பு 1 தரம் II இன் அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை | SLICT 1(II) |
| 03 | இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பச் சேவையின் வகுப்பு 1 தரம் I இன் அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை | SLICT 1(I) |

4.0 இப்பரீட்சை தொடர்பாக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். இச்சட்டங்களை மீறுமிடத்து ஒழுக்காற்று அதிகாரியினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர்கள் கட்டுப்பட வேண்டிய நிலை உருவாகும்.

5.0 இப்பரீட்சைக்கு விண்ணப்பித்தல் இணையத்தளத்தின் ஊடாக நிகழ்நிலை முறையிலாகும் (Online) இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.slida.lk இணையத்தளத்தில் பிரவேசிப்பதனால் மட்டுமேயாகும். இணையத்தளத்தின் முதல் பக்கத்தில் மேலே காணப்படும் “Apply for Examination” நீட்சியினூடாக அல்லது நேரடியாக http://examinationportal.slida.lk க்கு பிரவேசித்து உங்களால் பயனர் கணக்கொன்றை (User Account) ஆரம்பிக்க வேண்டுமென்பதுடன் அதன் பிறகு பரீட்சை விண்ணப்பத்தை பூர்த்தி செய்ய முடியும்.

விண்ணப்பத்தினைப் நிரப்புதல் 2025.07.25 ஆந் திகதி மு.ப 8.00 முதல் 2025.08.08 ஆந் திகதி மாலை 4.00 மணி வரையான காலப்பகுதியினுள் மட்டுமே முடியுமாக இருக்கும்.

6.0 I. பரீட்சைக் கட்டணம்- முதற் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சைக் கட்டணம் எதனையும் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. எவ்வாறாயினும் இதற்குப் பின்னரான தடவைகளில் அலுவலர்களினால் ஒருபாடத்துக்குமேல் தோற்றுவதாயின் ரூபா 500/- ஐப் பரீட்சைக் கட்டணமாகவும், ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் கட்டணமாக ரூபா 300/- இனையும் செலுத்துதல் வேண்டும்.

II. பரீட்சைக் கட்டணம் கீழ்குறிப்பிடப்பட்டிருக்கும் வங்கிக்கணக்குக்கு வரவு வைக்கப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| கணக்கின் பெயர் | - | செயலாளர், பொது நிர்வாக, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு |
| கணக்கு இலக்கம் | - | 310100119027430 |
| வங்கி | - | மக்கள் வங்கி – பம்பலப்பிட்டி கிளை |

குறித்த வைப்புக்காக வழங்கப்படும் வைப்புச் சீட்டு இலக்கத்தை விண்ணப்பப்படிவத்தில் உள்ளீடு செய்ய வேண்டும் என்பதுடன் வைப்புச் சீட்டுப் பிரதியின் புகைப்படம் ஒன்றை பரீட்சை விண்ணப்பத்தில் குறித்த இடத்தில் தரவேற்றம் (Upload) செய்ய வேண்டும்.

III. மேலும், கணக்குக்கு பணத்தைச் செலுத்தும் போது பணம் செலுத்துபவர் என விண்ணப்பதாரியின் பெயர், அடையாள அட்டை இலக்கத்தையும் பணம் செலுத்தும் காரணம் எனும் இடத்தில் உமக்கு உரிய பரீட்சையின் குறியீட்டுப் பெயரினையும் குறிப்பிட்டு பண வைப்புச்சீட்டினை பூரணப்படுத்த வேண்டும். (குறியீட்டுப் பெயர்கள் 03 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ளவாறு அமைதல் வேண்டும்.) நிகழ்நிலை ஊடாக (Online) ஊடாக பணம் செலுத்தும் அலுவலரும் கிடைக்கும் பற்றுச்சீட்டில் மேற்குறிப்பிட்ட தகவல்களை குறிப்பிட வேண்டும்.

குறிப்பு :

இப் பரீட்சை நிறைவேற்றுத்தர அரச உத்தியோகத்தர்களுக்காக நடத்தப்படும் பரீட்சையாகும். அதனால் விண்ணப்பத்தினை முன்வைக்கும் போது பிழையின்றி தகவல்களை உள்ளீடு செய்யவும் பரீட்சைக்கட்டணம் செலுத்தும் போது குறித்த முறையில் சரியான விதத்தில் செலுத்தவும் விண்ணப்பதாரிகளிடமிருந்து கண்டிப்பாக எதிர்ப்பார்க்கப்படுகிறது. அதனால் விண்ணப்பதாரியின் பெயர், அடையாள அட்டை இலக்கம் உள்ளிட்ட முக்கியமான தகவல்களை பிழையாக உள்ளீடு செய்தல், ஒரு விண்ணப்பதாரியினால் பல விண்ணப்பப்படிவங்களை முன்வைத்தல், பொருத்தமற்ற சேவையினை பரீட்சைக்காக தெரிவு செய்தல் தோற்றும் பரீட்சை தடவைகளின் எண்ணிக்கை தொடர்பில் போலியான தகவல்களை உள்ளீடு செய்தல் மற்றும் சரியான முறையில் பரீட்சை கட்டணம் செலுத்தாமை போன்ற விடயங்கள் தெரியவருமிடத்து அவ் விண்ணப்பதாரிக்கு எதிராக தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். அந் நடவடிக்கைகள் பரீட்சைப் பெறுபேறுகளை இடை நிறுத்துதல், பரீட்சார்த்தித் தகைமையை இரத்துச் செய்தல் அல்லது காரணவிளக்கம் கோரப்பட்டு இறுதியில் வழங்கப்படும் வேறு ஒழுக்காற்றுத் தண்டனையாகவும் இருக்கக்கூடும் என கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன்.

7.0 Online முறையில் விண்ணப்பத்தினைப் நிரப்பும்போது விண்ணப்பதாரியிடம் செயற்பாட்டிலுள்ள மின்னஞ்சல் முகவரி (e-mail) மற்றும் கையடக்கத் தொலைபேசி இலக்கம் இருத்தல் கட்டாயமானதாகும். விண்ணப்பத்தை நிகழ்நிலை ஊடாக அனுப்பியதன் பின்னர், அது கிடைத்தது பற்றி உறுதிப்படுத்தலொன்று மின்னஞ்சல் முகவரி மற்றும் கையடக்கத் தொலைபேசி இலக்கத்துக்கு அனுப்பப்படும்.

விண்ணப்பத்தைப் பரீட்சித்துப் பார்த்தல் முடிவடைந்ததன் பின்னர், உங்களின் பயனாளர் கணக்குக்குச் சென்று உங்களின் பரீட்சை அனுமதி அட்டையினை தரவிரக்கம் செய்ய முடியும். இது தொடர்பாக உங்களுக்கு குறுஞ்செய்தி (SMS) மூலம் அறிவிக்கப்படும்.

பரீட்சை அனுமதி அட்டை விண்ணப்பதாரிக்கு அனுப்பிவைத்தல் மின்னஞ்சல் முகவரிக்கு நிகழ்நிலை ஊடாக மட்டுமே அனுப்பிவைக்கப்படும் என்பதனை கவனத்தில் கொள்ளவும்.

8.0 விண்ணப்பப்படிவத்தினை சமர்ப்பிப்பது தொடர்பாக ஏதேனும் பிரச்சினைகள் எழும் போது அது தொடர்பான விசாரணைக்கு இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவன 011-5980264, 011-5980255, 011-5980236 எனும் தொலைபேசி இலக்கங்களுக்கு 2025.07.25 ஆம் திகதி முதல் 2025.08.08 திகதி வரை வார நாட்களில் மு.ப 8.30 மணி முதல் பி.ப. 4.30 மணி வரையில் அழைப்பினை மேற்கொள்ளலாம்.

9.0 பரீட்சை அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெற்ற அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முடியுமான வகையில் திணைக்களத் தலைவரினால் கடமை விடுமுறையை பெற்றுக்கொடுத்தல் வேண்டும். விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றுவதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அவசியப்படுமாயின் 011-5980264 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். பரீட்சைக்கு சமுகமளிப்பதற்கு பிரயாணக் கட்டணம் வழங்கப்படமாட்டாது.

10.0 பரீட்சார்த்தியின் அடையாளம் - பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியுறுகின்ற விதத்தில் சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தில் தமது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்:

i. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
ii. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணங்களில் ஒன்றினை சமர்ப்பிக்க முடியாத பட்சத்தில் விண்ணப்பதாரியின் விண்ணப்பம் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தற்றுணிபின் படி இரத்துச் செய்யப்படலாம்.

11.0 பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடைபெறும் என்பதோடு குறித்த சேவைக்கு உள்வாங்கும் பரீட்சைக்கு தோற்றிய மொழியில் அல்லது அரச கரும மொழியில் இப்பரீட்சைக்கு தோற்ற முடியும். போட்டிப் பரீட்சையின்றி இணைத்துக் கொள்ளப்பட்ட அலுவலர்களுக்கு தான் கல்வி கற்ற மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழியில் இப்பரீட்சைக்கு தோற்ற முடியும். பரீட்சார்த்தி ஒருவருக்கு தனது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடுகின்ற பரீட்சை மொழி மூலத்தினை மாற்றம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

12.0 தான் விரும்பிய ஒவ்வொரு பாடத்திற்கான வெவ்வேறு மற்றும் ஒன்றுக்கொன்று வித்தியாசமான தடவைகளில் தோற்ற அலுவலரினால் முடியும்.

13.0 பரீட்சை பெறுபேறுகள் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டதன் பின்னர் பெறுபேறுகள் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்படும். அப்பெறுபேறுகளுக்கு ஏற்ப குறித்த திணைக்களத் தலைவர்கள் அலுவலர்களின் சேவையினை உறுதிப்படுத்தல் மற்றும் பதவியுயர்வு நடவடிக்கைகளுக்கான பரிந்துரை முன்வைக்கப்படல் வேண்டும்.

14.0 பரீட்சை நடைமுறைகள் : ஒவ்வோர் வினைத்திறன்காண் தடைதாண்டற் பரீட்சைக்கு தோற்ற முடியுமான அலுவலர்களுக்கான பாடங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் கீழ்வருமாறு காணப்படுகின்றன :

14.1 இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் I ஆம் வகுப்பின் III ஆந் தரத்துடைய அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டற் பரீட்சை. (சேவைப் பிரமாணக் குறிப்பின் 13 ஆம் அட்டவணை). இப்பரீட்சைக்கு தோற்றுவதற்காக அரச சேவைக்குரிய இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் I ஆம் வகுப்பின் III ஆந் தரத்துடைய அலுவலர்களாக இருத்தல் வேண்டும்.

| *பாடங்கள்* | *பாட இலக்கம்* | *புள்ளி* | *காலம்* | *சித்தியெய்துவதற்கு பெறவேண்டிய ஆகக் குறைந்த புள்ளி* |
|---|---|---|---|---|
| தாபன விதிக்கோவையும் மற்றும் நிர்வாகமும் | 01 | 100 | 03 மணித்தியாலம் | 40 |
| நிதிப் பிரமாணமும் மற்றும் அரசாங்கத் துறையின் நிதி முகாமைத்துவமும் | 02 | 100 | 03 மணித்தியாலம் | 40 |
| முகாமைத்துவமும் ஒழுங்கமைப்பும் | 03 | 100 | 03 மணித்தியாலம் | 40 |

14.1.1 தாபன விதிக்கோவையும் மற்றும் நிர்வாகமும் ( பாட இலக்கம் - 01)
கீழ்க் காணப்படும் விடயங்களை உள்ளடக்கியதோர் வினாப் பத்திரமாகும்.

1) அலுவலகம் மற்றும் வெளிக்கள நடவடிக்கையினை ஒழுங்குபடுத்துதல் மற்றும் ஒழுங்கமைப்பு
2) தாபன விதிக்கோவையின் கீழ்க் குறிப்பிடப்படும் அத்தியாயங்கள் I,II,III,V,VI,VII,IX,XI,XXIII,XXV,XXVI, XXVII,XXVIII,XXIX,XXX,XXXI,XXXII,XXXIII,XLVII மற்றும் XLVIII
3) அரச சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள்

இவ்வினாப்பத்திரம் கட்டுரை வடிவிலான வினாக்களைக் கொண்டுள்ளது.

14.1.2 நிதிப் பிரமாணமும் மற்றும் அரசாங்கத் துறையின் நிதி முகாமைத்துவமும் ( பாட இலக்கம் – 02)
கீழ்க் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையிலமைந்த வினாப்பத்திரமாகும்.

(அ) இலங்கையில் பிசுக்கால் ஆட்சி, அரச நிதி முகாமைத்துவம் தொடர்பிலான அறிக்கை அரசியலமைப்பின் ஏற்பாடுகள், அரச நிதி தொடர்பான பாராளுமன்றத்தின் கட்டுப்பாடு, நிதியம் என்பதன் விளக்கம், திரட்டு நிதி மற்றும் அதன் செயற்பாடுகள், ஒதுக்கீட்டுக் கணக்கின் நோக்கங்கள் மற்றும் ஒதுக்கீட்டு முறைகள், எதிர்பாராப் பின்னிகழ்ச்சிச் செலவு நிதியம், பிற நிதியங்களும் அவற்றின் செயற்பாடுகளும், அரச வருமானங்கள், நிதி அமைச்சரின் தத்துவங்களும் பணிகளும், திறைசேரியின் தத்துவங்களும் பணிகளும் ஆணைச்சீட்டுக்களும் கட்டு நிதி அதிகாரமும், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தத்துவங்களும் பணிகளும், அரசாங்க செலவீனங்கள் மீதான குழு, அரசாங்க தொழில் முயற்சிகள் மீதான குழு.

(ஆ) கணக்கீட்டு உத்தியோகத்தர், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் வருவாய்க் கணக்கீட்டு அலுவலர்களை நியமித்தல், அவர்களின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்

(இ) உள்ளகக் கணக்காய்வு

(ஈ) அரச செலவீனங்களைத் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம், ஒழுங்கமைப்பின் நோக்கங்கள் மற்றும் பணிகளை இனங்காணல், அரசாங்க கொள்கைகள், குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் வேலை நிகழ்ச்சித்திட்டங்களை இனங்காணல், அபிவிருத்தி செயற்திட்டங்கள், நிகழ்ச்சிகளைத் திட்டமிடல் மற்றும் மதிப்பிடுதல் மற்றும் முன்னிலைப்படுத்தல், வருடாந்த வருமானங்கள் மற்றும் செலவினம் பற்றிய மதிப்பீடுகளைத் தயாரித்தல் மற்றும் இறுதி முடிவினைப் பெறுதல்.

(உ) அங்கீகரிக்கப்பட்ட செலவு மதிப்பீடுகளில் மாற்றங்கள் செய்தல், வகைமாற்று நடவடிக்கைகளின் பிரயோகம், அரசாங்கப் பிரிவின் ஆளணியினர் மற்றும் சம்பள முகாமைத்துவம், மொத்தக் கிரய மதிப்பீடுகளும் மீளாய்வுகளும், குறைநிரப்பு மதிப்பீடு.

(ஊ) அரச சொத்துக்களின் நட்டங்கள் மற்றும் விட்டுவிடுதல்களும்

(எ) நானாவித கணக்கு நடவடிக்கைகள்

(ஏ) அரசாங்க கட்டுப்பாடு பொருட்டு பணிகளினைக் கையளித்தல்

(ஐ) அரச நிதிகளின் பொறுப்பு மற்றும் வங்கிக் கணக்கு நடைமுறைகள்

(ஒ) அரசின் வழங்கற் செயற்பாட்டு நடைமுறைகள், பொருட்கள், சேவைகள் மற்றும் வேலைகளைப் பெற்றுக்கொள்ளல், பெறுகைக் குழு மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவின் தொகுப்பு, நியமனங்கள், அதிகாரங்கள் மற்றும் பணிகள், பெறுகை மதிப்பீட்டின் செயற்பாட்டு நடைமுறைகள், வெளிநாட்டு நன்கொடைகள் மீது செயற்படுத்தப்படும் செயற்திட்டங்களின் முகாமைத்துவம்.

இவ்வினாப்பத்திரம் கட்டுரை வடிவிலான வினாக்களினை உள்ளடக்கியுள்ளது.

14.1.3 முகாமைத்துவமும் ஒழுங்கமைப்பும் ( பாட இலக்கம் – 03)
கீழ்க் குறிப்பிடப்படும் விடயங்களின் அடிப்படையில் அமைந்ததோர் வினாப்பத்திரமாகும்.

(அ) முகாமைத்துவம் மற்றும் ஒழுங்கமைப்பு பற்றிய கோட்பாடுகள்
(ஆ) அக்கோட்பாடுகள் அரச பிரிவுகளில் தோற்றுவிக்கும் பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள்
(இ) முகாமைத்துவம் தொடர்பான நவீன முறைமைகள் மற்றும் நுட்பங்கள்

இவ்வினாப்பத்திரம் கட்டுரை வடிவிலான வினாக்களினை உள்ளடக்கியுள்ளது.

14.2 இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் 1 ஆம் வகுப்பின் II ஆந் தரத்துக்குரிய வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சை. (சேவைப் பிரமாணக் குறிப்பின் 14 ஆம் அட்டவணை). இப்பரீட்சையில் தோற்றுவதற்காக அரச சேவைக்குரிய இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் 1 ஆம் வகுப்பின் II ஆந் தரத்தினையுடைய அலுவலர்களாக இருத்தல் வேண்டும்.

| *பாடங்கள்* | | *பாட இலக்கம்* | *புள்ளி* | *காலம்* | *சித்தியெய்துவதற்கு பெறவேண்டிய ஆகக் குறைந்த புள்ளி* |
|---|---|---|---|---|---|
| அலுவலக முகாமைத்துவம் | | 04 | 100 | 1 மணித்தியாலம் | 40 |
| ஈ – அரசாங்க எண்ணக் கரு மற்றும் தகவல் தொழில்நுட்ப முகாமைத் துவம் | I ஆம் வினாப் பத்திரம்– பல்தேர்வு | 05-I | 40 | 1 மணித்தியாலம் | 16 |
| | II ஆம் வினாப் பத்திரம்–கட்டுரை | 05-II | 60 | 1 மணித்தியாலம் | 24 |

14.2.1 அலுவலக முகாமைத்துவம் ( பாட இலக்கம் - 04)

அரசாங்கப் பிரிவின் அலுவலகம் மனித மற்றும் பௌதீக வளங்களின் முகாமைத்துவம் தொடர்பாக வழங்கப்படும் விடய ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு பதிலளித்தல்.

14.2.2 ஈ - அரசாங்க எண்ணக்கரு மற்றும் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவம் (பாட இலக்கம் - 05)

(அ) I ஆம் வினாப்பத்திரம் – பல்தேர்வு (பாட இலக்கம் 05-I)

ஈ – அரசாங்க முறையின் பரிணாமம், அதன் காலங்கள், ஈ – அரசாங்க அடிப்படைப் பிரிவுகள், ஈ–அரசாங்க சேவைகள் (E-service) மற்றும் ஈ–அரசாங்க கருத்திட்டங்கள், அரசாங்க தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் கட்டுமானம், ஈ – அரசாங்க முறைமையை வெற்றியடையச்

செய்வதற்கான உறுதியான காரணிகள், ஈ – அரசாங்க முகாமைத்துவம், இணைந்து செயலாற்றும் தன்மை (Interoperability)மற்றும் சேவை சார்ந்த கணினி வடிவமைப்பு (Service Oriented Architecture) ஈ– அரசாங்க முறை (E- Government) எண்ணக்கருவினுள் உள்ளடக்கப்படும்.

(ஆ) II ஆம் வினாப்பத்திரம் – கட்டுரை (பாட இலக்கம் 05- II)

தகவல் தொழில்நுட்பத்தின் வாழ்க்கை வட்டம், அதன் ஒவ்வொர் சந்தர்ப்பங்களிலுமான முக்கியத்துவம் மற்றும் அதற்கு தேவைப்படும் வளங்களின் விஷேட தன்மை, தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத்தின் அடிப்படை கோட்பாடுகள், தகவல் தொழில்நுட்ப வளங்களின் முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்ப செயற்திட்டங்களின் இடர்கள் மற்றும் அவற்றினைக் குறைத்துக் கொள்ளல் என்பன தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத்தினில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

14.3 இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 1 ஆம் வகுப்பின் I ஆந் தரத்துடைய அலுவலர் களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டற் பரீட்சை. (சேவைப் பிரமாணக் குறிப்பின் 15 ஆம் அட்டவணை). இப்பரீட்சைக்கு தோற்றுவதற்காக அரச சேவைக்குரிய இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 1 ஆம் வகுப்பின் I ஆந் தரத்துடைய அலுவலர்களாக இருத்தல் வேண்டும்.

| *பாடங்கள்* | | *பாட இலக்கம்* | *புள்ளி* | *காலம்* | *சித்தியெய்துவதற்கு பெறவேண்டிய ஆகக் குறைந்த புள்ளி* |
|---|---|---|---|---|---|
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப செயற்றிட்டம் | I. செயற்றிட்ட அறிக்கை | 06-I | 60 | - | 30 |
| | II. செயற்றிட்ட அறிக்கையை சமர்ப்பித்தல் | 06-II | 40 | பரீட்சைக் குழுவிடம் சமர்ப்பிப்பதற்கும் விடையளித்தலுக்கும் 30 நிமிடங்கள் | 20 |

14.3.1 செயற்றிட்ட அறிக்கை (பாட இலக்கம் – 06- I)
இலங்கையின் அரசதுறை அலுவலங்களது வினைத்திறனை அதிகரிப்பதற்காக நடைமுறையில் உட்படுத்தக்கூடிய தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையுடன் தொடர்புடைய 15000 சொற்களுக்குக் குறையாத (பதினைந்தாயிரம்) செயற்றிட்ட அறிக்கையொன்றைத் தயாரித்தல்.

14.3.2 செயற்றிட்ட அறிக்கையை சமர்ப்பித்தல் (பாட இலக்கம் – 06- II)
பரீட்சைக் குழுவிடம் சமர்ப்பித்தலும் பரீட்சைக் குழுவால் கேட்கப்படுகின்ற கேள்விகளுக்கு விடையளித்தலும்.
ஒவ்வொர் பரீட்சை மற்றும் பாடத்தினை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள நேர அட்டவணை கீழ்வருமாறு காட்டப்படுள்ளது :

| *தொடர் இலக்கம்* | *பரீட்சையின் பெயர்* | *பாடங்கள்* | *பாட இலக்கம்* | *திகதி* | *நேரங்கள்* |
|---|---|---|---|---|---|
| 01 | இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 1 ஆம் வகுப்பின் III ஆந் தரத்துடைய அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சை | தாபன விதிக்கோவையும் மற்றும் நிர்வாகமும் | 01 | 2025.09.13 | மு.ப. 9.30<br>பி.ப. 12.30 |
| | | நிதிப் பிரமாணமும் மற்றும் அரசாங்கத் துறையின் நிதி முகாமைத்துவமும் | 02 | 2025.09.13 | பி.ப. 1.30 - பி.ப. 4.30 |
| | | முகாமைத்துவம் மற்றும் தாபனங்கள் | 03 | 2025.09.14 | பி.ப. 1.00 - பி.ப. 4.00 |

| தொடர் இலக்கம் | பரீட்சையின் பெயர் | பாடங்கள் | | பாட இலக்கம் | திகதி | நேரங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 02 | இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 1 ஆம் வகுப்பின் II ஆந் தரத்துடைய அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சை | அலுவலக முகாமைத்துவம் | | 04 | 2025.09.14 | மு.ப. 9.30<br>மு.ப. 10.30 |
| | | ஈ – அரசாங்க எண்ணக்கரு மற்றும் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவம் | I ஆம் வினாப்பத்திரம் - பல்தேர்வு | 05 - I | 2025.09.14 | மு.ப. 11.00 - பி.ப. 1.00 |
| | | | II ஆம் வினாப்பத்திரம் - கட்டுரை | 05 -II | | |
| 03 | இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் 1 ஆம் வகுப்பின் I ஆந் தரத்துடைய அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சை | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப செயற்றிட்டம் | செயற்றிட்ட அறிக்கை | 06 - I | செயற்றிட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் கையளிக்கும் திகதி தொடர்பாகவும் செயற்றிட்ட அறிக்கை சமர்ப்பிப்பது தொடர்பாகவும் விண்ணப்பப்படிவம் கையளிக்கும் இறுதி திகதிக்குப் பின் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படும். | |
| | | | செயற்றிட்ட அறிக்கையை சமர்ப்பித்தல் | 06- II | | |

15.0 இவ் அறிவித்தல் மூலம் ஏற்பாடு செய்யப்படாத எந்தவொரு விடயம் தொடர்பாகவும், பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.

16.0 இவ் அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையே ஏதேனும் வேறுபாடுகள் அல்லது முரண்பாடுகள் காணப்படின் சிங்கள அறிவித்தலே வலுவுள்ளதாகும்.

எஸ். ஆலோகபண்டார,
செயலாளர்,
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2025, யூலை 16.

07-816

## பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையில் வகுப்பு 3 இன் தரம் III, வகுப்பு 3 இன் தரம் II, வகுப்பு 3 இன் தரம் I, வகுப்பு 2 இன் தரம் II, வகுப்பு 2 இன் தரம் I என்பவற்றின் அலுவலர்களுக்கான வினைத் திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் – 2019 (I) 2025

1.0 இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையில் வகுப்பு 3 இன் தரம் III, வகுப்பு 3 இன் தரம் II, வகுப்பு 3 இன் தரம் I, வகுப்பு 2 இன் தரம் II, வகுப்பு 2 இன் தரம் I என்பவற்றின் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் - 2019(I) 2025 பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மேற்பார்வையின் கீழ் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தால் 2025.09.13, 2025.09.14 மற்றும் 2025.09.20 ஆகிய நாட்களில் கொழும்பில் நடாத்தப்படும் என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

2.0 (அ) இப் பரீட்சைகள் 1894/26 மற்றும் 2014.12.26 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை பிரமாணத்தில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடாத்தப்படும்.

(ஆ) முன்னரான பதவியின் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் வினைத்திறன்காண் தடைதாண்டல் தொடர்பாக குறிப்பிடாதுவிடத்து அல்லது நியமனக் கடிதத்தில் வினைத்திறன்காண் தடைதாண்டல் தொடர்பாக குறிப்பிடாதவிடத்து அவற்றை பூர்த்தி செய்யாத அலுவலர்கள் இருப்பின் உரிய வகுப்பில் உரிய தரத்திற்கு ஏற்புடையதான வினைத்திறன்காண் தடைதாண்டல் மேற்குறிப்பிடப்பட்டுள்ள சேவைப் பிரமாணக் குறிப்பு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதி தொடக்கம் மூன்று ஆண்டு(03) சலுகை காலப் பகுதியினுள் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.

3.0 மேற்குறிப்பிட்ட சேவைகளுக்கு உரித்துடையதாக நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் வினைத்திறன்காண் தடைதாண்டற் பரீட்சை கீழ்வருமாறு அமையப்பெற்றுள்ளது :

| *தொடர் இலக்கம்* | *பரீட்சையின் பெயர்* | *குறியீட்டு பெயர்* |
|---|---|---|
| 01. | இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 3 இன் தரம் III இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | SLICT3 (III) |
| 02. | இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 3 இன் தரம் II இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | SLICT3 (II) |
| 03. | இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 3 இன் தரம் I இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | SLICT3 (I) |
| 04. | இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 இன் தரம் II இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | SLICT2(II) |
| 05. | இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 இன் தரம் I இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | SLICT2 (I) |

4.0 இப் பரீட்சை தொடர்பாக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பளார் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ் படிதல் வேண்டும். இந்த சட்டங்களை மீறினால் ஒழுக்காற்று அதிகாரியால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

5.0 இப்பரீட்சைக்கு விண்ணப்பித்தல் இணையத்தளத்தின் ஊடாக நிகழ்நிலை முறையிலாகும் (Online) இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.slida.lk இணையத்தளத்தில் பிரவேசிப்பதனால் மட்டுமேயாகும். இணையத்தளத்தின் முதல் பக்கத்தில் மேலே காணப்படும் “Apply for Examination” நீட்சியினூடாக அல்லது நேரடியாக http://examinationportal.slida.lk க்கு பிரவேசித்து உங்களால் பயனர் கணக்கொன்றை (User Account) ஆரம்பிக்க வேண்டுமென்பதுடன் அதன் பிறகு பரீட்சை விண்ணப்பத்தை பூர்த்தி செய்ய முடியும்.

விண்ணப்பத்தினைப் நிரப்புதல் 2025.07.25 ஆந் திகதி மு.ப. 8.00 முதல் 2025.08.08 ஆந் திகதி மாலை 4.00 மணி வரையான காலப்பகுதியினுள் மட்டுமே முடியுமாக இருக்கும்.

6.0 I. பரீட்சைக் கட்டணம்- முதற் தடவையாக இப்பரீட்சைக்கு தோற்றும் அலுவலர்கள் பரீட்சைக் கட்டணம் எதனையும் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. எவ்வாறாயினும் இதற்குப் பின்னரான தடவைகளில் அலுவலர்களினால் ஒரு பாடத்துக்கு மேல் தோற்றுவதாயின் ரூபா 500.00 ஐ பரீட்சைக் கட்டணமாகவும், ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் கட்டணமாக ரூபா 300.00 இனையும் செலுத்துதல் வேண்டும்.

II. பரீட்சைக் கட்டணம் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் வங்கிக் கணக்குக்கு வரவு வைக்கப்பட வேண்டும்.

கணக்கின் பெயர் - செயலாளர், பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

கணக்கு இலக்கம் - 310100119027430

வங்கி - மக்கள் வங்கி - பம்பலப்பிட்டி கிளை

குறித்த வைப்புக்காக வழங்கப்படும் வைப்புச் சீட்டு இலக்கத்தை விண்ணப்பப் படிவத்தில் உள்ளீடு செய்ய வேண்டும் என்பதுடன் வைப்புச் சீட்டுப் பிரதியின் புகைப்படம் ஒன்றை பரீட்சை விண்ணப்பத்தில் குறித்த இடத்தில் தரவேற்றம் (Upload) செய்ய வேண்டும்.

III. மேலும், கணக்குக்கு பணத்தைச் செலுத்தும் போது பணம் செலுத்துபவர் என விண்ணப்பதாரியின் பெயர், அடையாள அட்டை இலக்கத்தையும் பணம் செலுத்தும் காரணம் எனும் இடத்தில் உமக்கு உரிய பரீட்சையின் குறியீட்டுப் பெயரினையும் குறிப்பிட்டு பண வைப்புச்சீட்டினை பூரணப்படுத்த வேண்டும். (குறியீட்டுப் பெயர்கள் 03 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ளவாறு அமைதல் வேண்டும்.) நிகழ்நிலை ஊடாக (Online) ஊடாக பணம் செலுத்தும் அலுவலரும் கிடைக்கும் பற்றுச்சீட்டில் மேற்குறிப்பிட்ட தகவல்களை குறிப்பிட வேண்டும்.

குறிப்பு :

இப் பரீட்சை அரச உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்படும் பரீட்சையாகும். அதனால் விண்ணப்பத்தினை முன்வைக்கும் போது பிழையின்றி தகவல்களை உள்ளீடு செய்யவும் பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது குறித்த முறையில் சரியான விதத்தில் செலுத்தவும் விண்ணப்பதாரிகளிடமிருந்து கண்டிப்பாக எதிர்ப்பார்க்கப்படுகிறது. அதனால் விண்ணப்பதாரியின் பெயர், அடையாள அட்டை இலக்கம் உள்ளிட்ட முக்கியமான தகவல்களை பிழையாக உள்ளீடு செய்தல், ஒரு விண்ணப்பதாரியினால் பல விண்ணப்பப்படிவங்களை முன்வைத்தல், பொருத்தமற்ற சேவையினை பரீட்சைக்காக தெரிவு செய்தல், தோற்றும் பரீட்சை தடவைகளின் எண்ணிக்கை தொடர்பில் போலியான தகவல்களை உள்ளீடு செய்தல், மற்றும் சரியான முறையில் பரீட்சை கட்டணம் செலுத்தாமை போன்ற விடயங்கள் தெரியவருமிடத்து அவ் விண்ணப்பதாரிக்கு எதிராக தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். அந் நடவடிக்கைகள் பரீட்சை பெறுபேறுகளை இடை நிறுத்துதல், பரீட்சார்த்தித் தகைமையை இரத்து செய்தல், அல்லது காரணவிளக்கம் கோரப்பட்டு இறுதியில் வழங்கப்படும் வேறு ஒழுக்காற்றுத் தண்டனையாகவும் இருக்கக்கூடும் என கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன்.

7.0 Online முறையில் விண்ணப்பத்தினைப் நிரப்பும்போது விண்ணப்பதாரியிடம் செயற்பாட்டிலுள்ள மின்னஞ்சல் முகவரி (e-mail) மற்றும் கையடக்கத் தொலைபேசி இலக்கம் இருத்தல் கட்டாயமானதாகும். விண்ணப்பத்தை நிகழ்நிலை ஊடாக அனுப்பியதன் பின்னர், அது கிடைத்தது பற்றி உறுதிப்படுத்தலொன்று மின்னஞ்சல் முகவரி மற்றும் கையடக்கத் தொலைபேசி இலக்கத்துக்கு அனுப்பப்படும்.

விண்ணப்பத்தைப் பரீட்சித்துப் பார்த்தல் முடிவடைந்ததன் பின்னர், உங்களின் பயனாளர் கணக்குக்குச் சென்று உங்களின் பரீட்சை அனுமதி அட்டையினை தரவிரக்கம் செய்ய முடியும். இது தொடர்பாக உங்களுக்கு குறுஞ்செய்தி (SMS) மூலம் அறிவிக்கப்படும்.

பரீட்சை அனுமதி அட்டை விண்ணப்பதாரிக்கு அனுப்பி வைத்தல் மின்னஞ்சல் முகவரிக்கு நிகழ்நிலை ஊடாக மட்டுமே அனுப்பி வைக்கப்படும் என்பதனை கவனத்தில் கொள்ளவும்.

8.0 விண்ணப்பப்படிவத்தினை சமர்ப்பிப்பது தொடர்பாக ஏதேனும் பிரச்சினைகள் எழும் போது அது தொடர்பான விசாரணைக்கு இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவன 011-5980264, 011-5980255, 011-5980236 எனும் தொலைபேசி இலக்கங்களுக்கு 2025.07.25 ஆம் திகதி முதல் 2025.08.08 ஆந் திகதி வரை வார நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.30 மணி வரையில் அழைப்பினை மேற்கொள்ளலாம்.

9.0 பரீட்சை அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெற்ற அலுவலர்கள் பரீட்சைக்கு தோற்றுவதற்கு முடியுமான வகையில் திணைக்களத் தலைவரினால் கடமை விடுமுறையை பெற்றுக்கொடுத்தல் வேண்டும். விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்றுவதனை

உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அவசியப்படுமாயின் 011-5980264 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். பரீட்சைக்கு சமுகமளிப்பதற்கு பிரயாணக் கட்டணம் வழங்கப்படமாட்டாது.

10.0 பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் - பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்தின் பொருட்டும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடைகின்றவாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்காக பின்வரும் எழுத்தாவணங்களில் ஒன்றை பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

i ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்படும் தேசிய ஆளடையாள அட்டை

ii செல்லுபடியான வெளிநாட்டு கடவுச்சீட்டு

மேற்படி ஆவணங்களை சமர்ப்பிக்க இயலாத விண்ணப்பத்தாரிகளின் பரீட்சார்த்த உரிமை இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பளார் நாயகத்தின் தற்றுணிபின் பிரகாரம் இரத்துச் செய்யலாம்.

11.0 சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் இப் பரீட்சை நடாத்தப்படுவதுடன், உரிய சேவையில் சேர்வதற்காக பரீட்சைக்கு தோற்றிய மொழியில் அல்லது அரச கரும மொழியில் இப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அலுவலர்களுக்கு முடியும். போட்டிப் பரீட்சையின்றி சேவைக்கு சேர்ந்த அலுவலர்களும் தாம் கல்வி கற்ற மொழியில் அல்லது அரசகரும மொழியில் இப் பரீட்சைக்கு தோற்றலாம். பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்கும் மொழி மூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

12.0 தாம் விரும்புகின்றவாறு ஒவ்வொரு பாடங்களுக்கும் வெவ்வேறாகவும், ஒவ்வொன்றுக்கு வேறுபட்ட அமர்வுகளிலும் தோற்றுவதற்கு அலுவலர்களுக்கு முடியும்.

13.0 பரீட்சை பெறுபேறுகள் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் வழங்கிய பின்னர், இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் பெறுபேறுகளை பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்படும். அந்த பெறுபேறுகளின் படி திணைக்களத் தலைவர்கள் அலுவலர்களின் சேவை உறுதிப்படுத்தல் மற்றும் தரமுயர்வுகள் என்பவற்றுக்கான பரிந்துரைகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

14.0 பரீட்சை திட்டம் : ஒவ்வொரு வினைத் திறன் காண் தடைதாண்டல் பரீட்சையின் பொருட்டும் தோற்றுகின்ற அலுவலர்களுக்கான பாடங்களும் பாடவிதானங்களும் பின்வருமாறாகும்.

14.1 இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையில் வகுப்பு 3 இன் தரம் III இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை. (சேவைப் பிரமாணக் குறிப்பில் 8 ஆவது அட்டவணை) இப் பரீட்சையில் தோற்றுவதற்கு இணைந்த சேவைக்குரிய இலங்கை தகவல் தொழில்நுட்ப சேவையில் வகுப்பு 3 இன் தரம் III இல் உள்ள அலுவலராதல் வேண்டும்.

| *பாடம்* | *பாட இலக்கம்* | *புள்ளிகள்* | *காலம்* | *சித்தி பெறுவதற்காக பெற்றுக்கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளி* |
|---|---|---|---|---|
| தாபன விதிக் கோவை | 01 | 100 | 01 மணித்தியாலம் | 40 புள்ளிகள் |
| நிதி ஒழுங்குவிதிகள் | 02 | 100 | 01 மணித்தியாலம் | 40 புள்ளிகள் |

14.1.1 தாபன விதிக் கோவை (பாட இலக்கம் -01)

தாபன விதிக் கோவை மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் தொடர்பாக அரச அலுவலருக்குரிய அடிப்படை அறிவை பரீட்சித்தல் இதன் போது எதிர்பார்க்கப்படுகிறது. வினாத்தாள் சுருக்கமான வினாக்களையும் கட்டமைவு முறையிலான வினாக்களையும் கொண்டமைந்திருக்கும். எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

14.1.2 நிதி ஒழுங்கு விதிகள் (பாட இலக்கம் -02)

அரசாங்க அலுவலகங்களில் பிரயோகிக்கின்ற நிதி ஒழுங்குவிதிகள் தொடர்பான அடிப்படை அறிவு மற்றும் நிதிக் கட்டுப்பாட்டு புத்தகங்களில் அலுவல்கள் தொடர்பான அறிவு மற்றும் களஞ்சியப்படுத்தல் தொடர்பான அடிப்படை அறிவை அளவிடுதல் எதிர்பார்க்கப்படுகிறது. வினாத்தாள் சுருக்கமான வினாக்களையும்

கட்டமைவு முறையிலான வினாக்களையும் கொண்டமைந்திருக்கும். எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

14.2 இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையில் வகுப்பு 3 இன் தரம் II இற்கு உரியதான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை. (சேவைப் பிரமாணக் குறிப்பில் 9 ஆவது அட்டவணை) இப் பரீட்சைக்கு தோற்றுவதற்காக இணைந்த சேவைக்குரிய இலங்கை தகவல் தொழில்நுட்ப சேவையில் வகுப்பு 3 இன் தரம் II இல் உள்ள அலுவலராதல் வேண்டும்.

| *பாடம்* | *பாட இலக்கம்* | *புள்ளிகள்* | *காலம்* | *சித்தி பெறுவதற்காக பெற்றுக்கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளி* |
|---|---|---|---|---|
| 1. அலுவலக முறைமைகளும் நடைமுறைகளும் | 03 | 100 | 02 மணித்தியாலம் | 40 |
| 2. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 04 | 100 | 03 மணித்தியாலம் | 40 |

14.2.1 அலுவலக முறைமைகளும் நடைமுறைகளும் (பாட இலக்கம் 03)

அரசாங்க அலுவலகங்களில் பிரயோகிக்கும் அலுவலக முறைகள் தொடர்பாக பரீட்சார்த்தியின் அறிவை பரீட்சித்தல் மற்றும் அவற்றை பிரயோகிப்பதில் உள்ள ஆற்றலை பரீட்சித்தலும் எதிர்பார்க்கப்படுகிறது. இவ் வினாத்தாள் கட்டமைவு முறையிலான வினாக்களை கொண்டமைந்திருக்கும். எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

14.2.2 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (பாட இலக்கம் - 04)

அரசாங்க அலுவலகங்களில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பொதுவான எண்ணக்கருக்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தை சிறந்த முறையில் பிரயோகித்தல் தொடர்பான அறிவை பரீட்சிக்கப்படும்.

(அரசாங்க நிறுவனங்களில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பிரயோகிக்கும் முறை, கணினி வலையமைப்பு, தரவு தொடர்பாடல் தொடர்பான சிறந்த அறிவு, பொதுவான நோக்க மென்பொருள் தொடர்பான அறிவு, விசேடமாக பயன்படுத்தும் மென்பொருள், தரவு பாதுகாப்பும் மென்பொருள்களின் பாதுகாப்பும் கணினி முறைமைகளில் தொடர்ச்சியாக சேவை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் தரவு பாதுகாப்பை அதிகரிப்பதற்கு மேற்கொள்ள முடியுமான அடிப்படை நடைமுறைகள் )

இவ் வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்

பகுதி I - பல்தேர்வு வினாத்தாளாகும். காலம் 01 மணித்தியாலம். (40 புள்ளிகள்)

பகுதி II - கட்டுரை வினாத்தாளாகும். காலம் 02 மணித்தியாலங்கள் (60 புள்ளிகள்)

14.3 இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையில் வகுப்பு 3 இன் தரம் I இற்கு உரியதான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை. (சேவைப் பிரமாணக் குறிப்பில் 10 ஆவது அட்டவணை) இப் பரீட்சைக்கு தோற்றுவதற்காக இணைந்த சேவைக்குரிய இலங்கை தகவல் தொழில்நுட்ப சேவையில் வகுப்பு 3 இன் தரம் I இல் அலுவலராதல் வேண்டும்.

| *பாடம்* | *பாட இலக்கம்* | *புள்ளிகள்* | *காலம்* | *சித்தி பெறுவதற்காக பெற்றுக்கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளி* |
|---|---|---|---|---|
| 1. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (எழுத்திலான பரீட்சை) | 05 | 50 | 01 மணித்தியாலம் | 20 |

| *பாடம்* | *பாட இலக்கம்* | *புள்ளிகள்* | *காலம்* | *சித்தி பெறுவதற்காக பெற்றுக்கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளி* |
|---|---|---|---|---|
| 2. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (செய் முறைப் பரீட்சை) | 06 | 50 | 01 மணித்தியாலம் | 20 |

14.3.1 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் - எழுத்திலான பரீட்சை (பாட இலக்கம் -05)

I. அலுவலக நடவடிக்கைகளின் பொருட்டு மென் பொருள் பிரயோகமும் அது தொடர்பான அறிவும்

II. கணினி வலையமைப்பு தொடர்பான அறிவு

III. கணினி மென்பொருள்களின்/வன்பொருள்களின் கோளாறுகளை அடையாளம் காணல் மற்றும் அவற்றை தீர்த்தல் தொடர்பான அறிவு

இவ் வினாத்தாள் சுருக்கமான வினாக்கள் மற்றும் கட்டுரை முறையிலான வினாக்களை கொண்டமைந்திருக்கும். எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

14.3.2 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் - செயன்முறைப் பயிற்சி (பாட எண் - 06)

I. அலுவலக நடவடிக்கைகளின் போது மென்பொருள் பயன்பாடு தொடர்பான நடைமுறை அறிவு.

II. கணினி வலையமைப்பு தொடர்பான நடைமுறை அறிவு.

III. கணினி மென்பொருள்/வன்பொருள் என்பவற்றில் குறைபாடுகளைக் கண்டறிதல் மற்றும் அவற்றை தீர்ப்பதற்கான நடைமுறை அறிவு.

14.4 இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 இன் தரம் II இற்குரிய வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை (சேவைப் பிரமாணக் குறிப்பின் 11 ஆம் உப அட்டவணை). இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு, இணைந்த சேவைக்குரிய இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 இன் தரம் II ஐச் சேர்ந்த அலுவலர்களாயிருத்தல் வேண்டும்.

| | *பாடம்* | *பாட எண்* | *புள்ளிகள்* | *காலம்* | *சித்தியடைவதற்கு பெறவேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள்* |
|---|---|---|---|---|---|
| 1. | தாபனவிதிக் கோவை | 07 | 100 | 02 மணித்தியாலங்கள் | 40 |
| 2. | நிதிப் பிரமாணங்கள் | 08 | 100 | 02 மணித்தியாலங்கள் | 40 |

14.4.1 தாபனவிதிக் கோவை (பாட எண் - 07)

தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகள்/அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் தொடர்பாக அலுவலரிடம் காணப்படுகின்ற பொதுவான அறிவையும், அவ்வறிவை நடைமுறை ரீதியாகப் பயன்படுத்தத்தக்க ஆற்றலும் இதன்போது பரிசீலிக்கப்படும். தாபன விதிக்கோவையின் I ஆவது, II ஆவது பாகங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள அத்தியாயங்களிலிருந்தும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினது நடைமுறை விதிகளிலிருந்தும் இவ்வினாப்பத்திரம் தயாரிக்கப்படும். இவ்வினாப்பத்திரமானது குறுகிய வினாக்கள் மற்றும் கட்டமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

14.4.2 நிதிப்பிரமாணங்கள் (பாட எண் - 08)

அரசாங்க நிறுவனங்களில் பயன்படுத்தப்படுகின்ற நிதிப் பிரமாணங்கள் தொடர்பான அறிவு மற்றும் நிதிக் கட்டுப்பாட்டு பதிவேடுகளினது நடவடிக்கைகள் தொடர்பான விளக்கம் மற்றும் களஞ்சியப்படுத்தல் தொடர்பான அறிவு என்பன மதிப்பீடு செய்யப்படும். இவ்வினாப்பத்திரமானது குறுகிய வினாக்கள் மற்றும் கட்டமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

14.5 இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 இன் தரம் I இற்குரிய வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை. (சேவைப் பிரமாணக்குறிப்பின் 12 ஆம் உப அட்டவணை) இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக இணைந்த சேவைகளுக்குரிய இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 இன் தரம் I இன் அலுவலராக இருத்தல் வேண்டும்.

| *பாடம்* | *பாட இல.* | *புள்ளிகள்* | *காலம்* | *சித்தியடைவதற்கு பெறவேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 1. அலுவலக முறைகள் மற்றும் அலுவலக நடைமுறைகள் | 09 | 100 | 02 மணித்தியாலங்கள் | 40 |
| 2. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் ஈ - அரசாங்கம் | 10 | 100 | 03 மணித்தியாலங்கள் | 40 |

14.5.1. அலுவலக முறைகள் மற்றும் அலுவலக நடைமுறைகள் (பாட இல. - 09)

அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப்படுகின்ற அலுவலக முறைகள் தொடர்பான பரீட்சார்த்தியின் அறிவு மற்றும் அவற்றைப் பயன்படுத்தும் ஆற்றல் என்பன பரிசீலிக்கப்படும். இவ்வினாப்பத்திரமானது பல்தேர்வு வினாக்கள், குறுகிய வினாக்கள் மற்றும் கட்டமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

14.5.2. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் ஈ - அரசாங்கம் (பாட இல. - 10)

இவ்வினாப்பத்திரமானது இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்.

பகுதி I - பல்தேர்வு வினாத்தாளாகும். காலம் 01 மணித்தியாலம். (40 புள்ளிகள்)

பகுதி II - கட்டமைப்பு முறையிலான கட்டுரை வினாத்தாளாகும் காலம் 02 மணித்தியாலங்கள் (60 புள்ளிகள்)

(எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்)

இவ்வினாப்பத்திரமானது கீழே காட்டப்பட்டுள்ள விடயப் பரப்பை உள்ளடக்கியவாறு தயாரிக்கப்படும்.

(அ) தகவல் தொழில்நுட்ப கருத்திட்ட சுற்றோட்டத்தின் அடிப்படை பகுதிகளான முறைமைகள் கற்கை, கட்டமைப்பு பகுப்பாய்வு, கட்டமைப்பு உருவாக்கம், அதற்கான மென்பொருள் உருவாக்கம், அவற்றைப் பரிசீலித்தல், பயன்படுத்துனரைப் பெற்றுக் கொள்ளும் பரிசோதனைகள் என்பனவும் அவற்றுடன் தொடர்புடைய தொழில்நுட்பத் துறைகளான அல்கோரிதம், HTML, XTML, php, தரவு மற்றும் தகவல் பாதுகாப்பு, இடர் காரணமாக மீளவும் கட்டமைப்புக்களைத் தாபித்தல், புலமைச் சொத்துரிமை மற்றும் மென்பொருள் அனுமதிப்பத்திரம், சுதந்திர மற்றும் திறந்த மூலங்களிலான மென்பொருள்கள், இணைய 2.0 என்பன தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவிற்குள் உள்ளடக்கப்படும்.

(ஆ) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை அரசாங்க துறையில் பயன்படுத்தும் முறைகள், அரசாங்க துறையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மிக வினைத்திறான சேவைகளை வழங்குதல், ஈ - அரசாங்க முறைமைகளுக்குத் தேவையான அடிப்படை தொழில்நுட்ப தேவைப்பாடுகள், அரசாங்க தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினது ஆகக் கூடிய கட்டமைப்பிற்கான அடிப்படை அம்சங்கள், ஈ - அரசாங்கம் கட்டமைப்பிற்கான அடிப்படை அம்சங்கள், (Inter-operability) என்பன ஈ - அரசாங்கம் என்ற பகுதிக்குள் உள்ளடக்கப்படும்.

ஒவ்வொரு பரீட்சையினதும் ஒவ்வொரு பாடங்களும், நடாத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள கால அட்டவணை கீழே காட்டப்பட்டுள்ளது :

| *தொடர் இலக்கம்* | *பரீட்சையின் பெயர்* | *பாடம்* | *பாட இல.* | *திகதி* | *நேரம்* |
|---|---|---|---|---|---|
| 01 | இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 3இன் தரம் III இற்குரிய அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | தாபன விதிக்கோவை | 01 | 2025.09.14 | மு. ப. 9.00 - மு. ப. 10.30 |
| | | நிதிப் பிரமாணம் | 02 | 2025.09.14 | மு. ப. 11.00 – நண்பகல் 12.00 |
| 02 | இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 3இன் தரம் II இற்குரிய அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | அலுவலக முறைகள் மற்றும் நடைமுறைகள் | 03 | 2025.09.13 | மு. ப. 9.30 - பி.ப. 12.30 |
| | | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 04 | 2025.09.13 | பி. ப. 1.00 - பி. ப. 4.00 |
| 03 | இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 3 இன் தரம் I இற்குரிய அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (எழுத்துமூலப் பரீட்சை) | 05 | 2025.09.20 | மு. ப. 9.30 - மு. ப. 10.30 |
| | | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (செயன்முறைப் பரீட்சை) | 06 | 2025.09.20 | மு. ப. 11.00 – நண்பகல் 12.00 |
| 04 | இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2இன் தரம் II இற்குரிய அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | தாபனவிதிக் கோவை | 07 | 2025.09.14 | மு. ப. 9.30 - மு. ப. 11.30 |
| | | நிதிப் பிரமாணம் | 08 | 2025.09.14 | நண்பகல் 12.00 - பி.ப. 2.00 |
| 05 | இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 இன் தரம் I இற்குரிய அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை. | அலுவலக முறைகளும் நடைமுறைகளும் | 09 | 2025.09.14 | மு. ப. 9.30 - மு. ப. 11.30 |
| | | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் ஈ - அரசாங்கம் | 10 | 2025.09.14 | நண்பகல் 12.00 - பி.ப. 3.00 |

15.0 இப்பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத எந்தவொரு விடயம் தொடர்பாகவும், இணைந்த சேவைகள் பணிப்பாளரது தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையும்.

16.0 இவ் அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் அல்லது வேறுபாடுகள் காணப்பட்டால் சிங்கள மொழிமூல அறிவித்தலே வலுவுள்ளதாகும்.

என்.யூ. நிஷான் மெண்டிஸ்,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிருவாக, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2025, யூலை 16.

07-817

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.